பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 14 திங்கட்கிழமை 31.10.2022 கதிர் 358

### இனி இது ரகசியம் அல்ல!

‘தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா’ என்ற வாசக அடியைப் பல தடவைகள் வாசித்து, அறிந்து, கேட்டு, பேச்சுக்களிலும் எழுத்துக்களிலும் பயன்படுத்தியும் இருக்கிறேன்.

அதனை நேற்று உணர்வு பூர்வமாக உணர்ந்தேன். ☞2

# இந்தியாவும் இலங்கையும் நாணயத்தின் இரு பக்கங்கள்



## தூதுவர் முன்னிலையில் ரணில் சுட்டிக்காட்டு

கலாசார மற்றும் மத ரீதியிலான சில வேறுபாடுகள் இருந்தாலும், இந்தியாவும் இலங்கையும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அந்த ஒற்றுமைகள் பிரதிபலிக்கும் சந்தர்ப்பங்களில் தீபாவளியும் ஒன்று என்றும், அது இன்று முழு உலகமும் கொண்டாடும் பண்டிகையாக மாறியுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் (29) மாலை கொழும்பு எக்ஸ்பட்ஸ் கலாசார சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விசேட தீபாவளி கொண்டாட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் கூறினார். ☞2

# இ.தொ.கா. - முற்போக்குக் கூட்டணி இனிமேல் இரட்டை குழல் துப்பாக்கி!

## பெருமிதத்துடன் மனோ பிரகடனம்

**ஹட்டன்,ஒக்டோபர்31**

**மலையகத் தமிழர்களின் எழுச்சி, வளர்ச்சியில் இரட்டை குழல் துப்பாக்கியாகச் செயற்படுவோம் என இ.தொ.காவுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அது தற்போது சாத்தியப்பட்டுள்ளது. மலையகம் இன்று ஒளிர்கிறது, ஒரு சிங்கமாக, புலியாக எழுச்சி பெறுகின்றது. நாங்கள் உழைக்க மட்டும் இங்கு வரவில்லை, ஆளவும்தான் வந்துள்ளோம் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.** ☞2





## பதவிகளுக்காக இனவாதக் கும்பலிடம் சரணடைந்து துரோகம் செய்யவில்லை

### மக்கள் முன்னிலையில் சஜித் பெருமிதம்



நான் ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்காக இனவாதக் கும்பலிடம் சரணடைந்து மக்களுக்குத் துரோகம் செய்யவில்லை.

-இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நுவரெலியா, ஹட்டன் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற ☞2

## மலையக மக்களை இந்தியா கைவிடாது

### இந்தியத் தூதுவர் வாக்குறுதி



மலையக மக்கள் இந்தியாவுடன் மிகவும் பலமான தொடர்புகளைக் கொண்டுள்ளனர். இந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் மனோ கணேசன் கூறியவாறு இலங்கையைக் கட்டியெழுப்ப பங்களிப்பு வழங்கி வருகின்றனர். இந்தியாவுடன் ☞12

## குளத்தில் மூழ்கி சிப்பாய் மரணம்

குளத்தில் நீராடச் சென்ற இராணுவச் சிப்பாய் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் - எகெட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கிரிகம்பமுனுவ, பொல்கஸோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய ☞12



## யாழில் விஜயதாஸ ராஜபக்ஷ

(இ.கலையமுதன்)

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இரண்டாம் மொழி சிங்கள கற்கையை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை யாழ்ப்பாணத்தில் ☞12

## நெருக்கடிகளின் போது அமெரிக்காவின் ஆதரவை ஒருபோதும் மறக்கவே முடியாது

### கொழும்புத் தூதரகத்தின் புதிய கட்டட திறப்பு விழாவில் நன்றி தெரிவித்த ரணில்



அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான 74 வருடகால உறவை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு நெருக்கடியை ☞12



## யாழ். முஸ்லிம்களின் வெளியேற்றம் 32 ஆம் வருட நினைவு அனுஷ்டிப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்.31

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட நாளின் 32 ஆவது நினைவேந்தல் கரிநாளாக நேற்றைய தினம் ☞12

## வவுனியாவில் நீதி வேண்டி உறவுகள் போராட்டம்




(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் நீதி கோரியும் அரசுக்கு எதிராகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ☞12

## மலையகத் தமிழ் மக்கள் தொடர்பில் ஆராய குழு

### இ.தொ.காவிடம் ஜனாதிபதி உறுதி



மலையகத் தமிழ் மக்களை இலங்கை சமூகத்துடன் மேலும் எவ்வாறு இணைப்பது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மலையகத்தைப் பூர்வீகமாக கொண்ட தமிழ் மக்களில் சிலர் இலங்கை சமூகத்துடன் வெற்றிகரமாக இணைந்துள்ளனர் என்றும், வேறு சிலர் ☞12

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம் மலையக உறவுகளின் ஒரு நிகழ்வின் சங்கமத்தில் அதனை அவதானித்தேன்.

மலையகத் தமிழ் கட்சிகளின், அதுவும் அவற்றின் தலைவர்களினது உறவு நிலை குறித்து பத்திரிகையாளனாக எனக்கு மிகுந்த பரிச்சயம் உண்டு. அவர்களுக்குள் நடக்கும் மோதல்கள், அதிகார அட்டகாசங்கள், ஒருவரை ஒருவர் மிதிக்கும் அரசியல் அடாவடித்தனங்கள் எல்லாம் இப்போது பழைய கதைகள். அவை மலையேறி விட்டன. ஒன்றுபட்ட ஒரு தேசிய இனமாக எழுச்சி பெறுவதற்கு எது அவசியமோ, அதை அவர்கள் – குறிப்பாக அவர்களின் தலைவர்கள் - சரியாகவும் கனகச்சிதமாகவும் அடையாளம் கண்டு விட்டனர். அதைச் சரியாகக் கடைப்பிடிக்கவும் அவர்கள் தயாராகி விட்டனர்.

நேற்றைய ஹட்டன் நிகழ்வில் மலையகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் வெளிப்படையான பேச்சு அதனை எடுத்தியம்பி, நிரூபித்து நிற்கின்றது.

ஒன்றிணைய முடியாத மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஒன்றிப்பு அவசியம் என்பதை உணர்ந்து அதில் எவ்வளவு தூரம் உறுதியாக நின்றார்கள், அதற்காக எவ்வளவு தூரம் சகித்துக் கொண்டார்கள், விட்டுக் கொடுத்தார்கள் என்பவற்றை எழுதுவதாயின் ஒரு கட்டுரைத் தொடரே வரையலாம். பல தரப்புகளுடனும் தொடர்பு வைத்துள்ள ஊடகவியலாளன் என்ற முறையில் இந்தத் தலைவர்களையும், அவர்களின் போக்குகளையும், பண்புகளையும் நான் அறிவேன். அந்தத் தமிழ் முற்போக்கு முன்னணியின் கூட்டு இத்துணை ஆண்டுகள் தாக்குப்பிடித்து, ஒரு கூட்டணி அரசியல் கட்சியாக பதிவு செய்து, நின்று பிடிக்கும் வலுவான நிலைக்கு வரும் என்று ஆரம்பத்தில் நான் நம்பவில்லை. ஆனால் அதை சாத்தியமாக்கி காட்டினார்கள் மூன்று தலைவர்களும். அதற்காக அவர்கள் எவ்வளவு சகித்துக் கொண்டார்கள், பொறுமை காத்தார்கள், ஒருவருக்கொருவர் மதிப்பளித்து விட்டுக் கொடுத்து நடந்து கொண்டார்கள் என்பது அவர்களிடமிருந்து ஏனைய அரசியல் பிரமுகர்கள் படித்துக் கொள்ள வேண்டிய பாடம்.

அந்த ஐக்கியச் சிறப்பை, அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி, தங்கள் மக்கள் இந்த நாட்டின் பலமுள்ள ஒரு தேசிய இனமாக எழுச்சி பெறும் யதார்த்தத்தை அவர்கள் இப்போது உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.

தொண்டமான்கள், கணேசன்கள், திகாம்பரம் போன்ற தரப்புகளுக்கு இடையில் சந்ததி சந்ததியாக இருந்த வைரித்தனத்தை நான் அறிவேன். அதையெல்லாம் மூடை கட்டி ஒதுக்கிவிட்டு, ஒரு தேசிய இனமாக மேலெழ எது தேவையோ, அதை மட்டும் அவர்களின் புதிய தலைமுறைத் தலைவர்கள் தங்கள் பாதையாகத் தேர்ந்தெடுத்திருக்கின்றார்கள்.

இதனால் இலங்கை அரசியலில் பேரினவாதிகள் கூட புறமொதுக்க முடியாது பெரும் வலுவான சக்தியாக மலையகத் தமிழினம் திரண்டெழும் அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

மனோ கணேசன் கூறுவது போல அவரின் தமிழ் முற்போக்கு கூட்டணியும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இரட்டைக் குழல் துப்பாக்கியானால், சிங்களப் பேரினவாதமே அதற்கு பின்னர் மலையகத் தமிழ் சமூகத்திடம் இலகுவாக வாலாட்ட முடியாது என்பது நிச்சயம்.

தொண்டமானின் பரம்பரையில் வந்த இள இரத்தம், மனோ கணேசன் எனது வழிகாட்டி, திகாம்பரம் எனது அண்ணன் என்ற உரிமையோடு பகிரங்க அரசியலுக்கு வந்திருக்கிறது என்றால், அந்த அரசியல் கலாச்சார வளர்ப்புக்காக பூட்டன் சௌமியமூர்த்தி தொண்டமானும், அவர் பேரன் ஆறுமுகம் தொண்டமானும் மெச்சப்பட வேண்டியவர்கள். அதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும்.

முந்திய தலைமுறையில் எதிரெதிர் நிலையைப் பற்றி நின்றார்கள் சௌமிய மூர்த்தி தொண்டமானும் வி.பி.கணேசனும்.

ஆனால் பெரிய தொண்டமானின் பூட்டன் ஜீவன் தொண்டமானும், வி.பி. கணேசனின் மகன் மனோ கணேசனும் இன்று 'வழிகாட்டி - வழி தொடர்பவர்' என்ற யதார்த்தத்தைப் புரிந்து அதற்கு இணங்கி இருக்கின்றார்கள். இதை இவ்வளவு உணர்ந்து, மெச்சி, நான் எழுதுவதற்குக் காரணமுண்டு.

சிறுபான்மையினர் என்ற முறையில் மலையகத் தமிழர்கள் எதிர்கொண்ட அடக்கு முறையைத்தான் பேரினவாதத்திலிருந்து வடக்கு, கிழக்குத் தமிழர்களாகிய நாமும் எதிர்கொண்டோம்.

அடக்கு முறையை எதிர்த்த போராட்டத்தினால் பேரிழப்புகளைச் சந்தித்த பின்னரும் கூட, நமது தலைவர்களுக்கு, அந்த மலையகத் தமிழ் தலைமைகளுக்கு புரிந்த அரசியல் தலைமைத்துவ பண்புகள் வரவே இல்லை என்ற ஆதங்கம்தான் இதை எழுத வைத்தது.

அரசியலில் பரம வைரியாக இருந்த தந்தை செல்வாவும், ஜீ.ஜீ.பொன்னம்பலமும் கூட, இன நலன் ஒன்றையே முன்னிறுத்தி, எதிரித்தனத்தைக் கைவிட்டு, ஒன்றிணைந்தார்கள். ஆனால் அவர்களின் சந்ததிகள் இன்று என்ன செய்கின்றன?

மலையகத்தில், மூத்த சந்ததியின் வைரித்தனத்தை ஒதுக்கி வைத்து விட்டு, தம் இன நலனுக்காக புதிய சந்ததி ஒன்றிணைகிறது. தமது இனத்தை தலைநிமிர வைக்க எது தேவையோ, அதை ஐக்கியப்பட்டு செய்ய விழைகின்றது.

நமது தமிழர் தாயகத்தில் மூத்த தலைமுறை, காலத்தின் கட்டாயம் கருதி ஒன்றித்து வைத்த இணைப்பை, அடுத்த தலைமுறைகள் சிதறடித்து, தமிழர் ஒற்றுமையை நாறடிக்கின்றன.

நமது அரசியல் தலைவர்கள் மலையகத் தமிழ்த் தலைமைகளிடம் கொஞ்சம் கேட்டுப் படித்தால் நல்லது.

அவர்களின் (வடக்கு, கிழக்கு தமிழர்களின்) திமிர்த்தனம் அதற்கு இடம் கொடுக்காது.

மலையகத்தின் இயல்பான பணிவு அவர்களின் தலைமைகளைத் துணிவு கொள்ள வைத்திருக்கின்றது.

வடக்கு கிழக்கில் தலைவர்களின் ஒற்றுமையற்ற துணிவு, அவர்களின் தலைமைகளை பணிந்துபோன நிலைக்குத் தள்ளிவிட்டது. இதுதான் உண்மை.

**- மின்னல் -**

## இந்தியாவும் இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபாவளி என்பது அனைவரையும் ஒன்றிணைக்கும் மற்றும் நெருங்கியவர்களை சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, ஐக்கியத்தையும் ஒத்துழைப்பையும் குறிக்கும் வகையில் தீபாவளி கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தமைக்காக கொழும்பு வெளிநாட்டு கலாசார சங்கத்துக்கு நன்றியம் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று நோய் காரணமாக இலங்கை பொருளாதார ரீதியாக சவாலான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில், பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் வாழ்க்கையைப் பிரகாசமாக்குவதற்கு கலாசார சங்கம் ஆற்றிவரும் பங்களிப்பையும் ஜனாதிபதி பாராட்டினார்.

சிரேஷ்ட பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கொழும்பு வெளிநாட்டு கலாசார சங்கத்தின் தலைவர் கப்டன் ஏ. பேனர்ஜி மற்றும் பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## இ.தொ.கா. - முற்போக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹட்டனில்தமிழ்முற்போக்குகூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு:-

மலையக மக்கள் உழைப்பாளர்களாக இலங்கைக்கு அடியெடுத்து வைத்து 2023 ஆம் ஆண்டுடன் இருநூறு வருடங்களாகின்றன. நாங்கள் இங்கு உழைப்பதற்கு மட்டும் வரவில்லை. ஆளவும்தான் வந்துள்ளோம். கண்டி இராஜ்ஜியத்தை கடைசியாக ஆண்ட மன்னன் கூட இந்தியா வம்சாவளி தமிழர்தான். எனவே, நாங்களும் ஆண்ட பரம்பரைதான். இலங்கையில் இன்று ஒரு தேசிய இனமாக எழுச்சி பெற்றுள்ளோம்.

மலையகத்தில் இருந்து வெளியே சென்று தொழில் செய்பவர்கள், தோட்டத் தொழிலாளர்களை தூக்கி விடுவதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அதற்கான கடப்பாடு அனைவருக்கும் உள்ளது. இலங்கை அரசாங்கமும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டத்தை சமூக வளர்ச்சிக்காக வகுக்க வேண்டும்.

அதேவேளை, தேயிலை ஏற்றுமதி மூலம் சிறந்த வருமானம் கிடைக்கின்றது. எனினும், அவற்றை பகிர்ந்துக்கொள்வதற்கு தோட்ட நிறுவனங்கள் தயாரில்லை. எனவே, தொழிலாளர்களுடன் வருமானங்களை பகிர்ந்துகொள்ள தோட்ட நிறுவனங்கள் தாமாக முன்வர வேண்டும். இல்லையேல் தோட்ட நிறுவனங்களுக்கு மறக்க முடியாத பாடத்தை கற்பிப்போம். எங்கள் பொறுமையையும், நிதானத்தையும் எவரும் பலவீனமாக கருதிவிடக் கூடாது. - என்றார்.

## பதவிகளுக்காக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத்திறப்புவிழாவில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று நான் ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டிருந்தால் மொட்டுவின் பாதுகாவலராக மாற வேண்டியிருந்திருக்கும். இனவாத, மதவாத கும்பலுடன் இணைய வேண்டியிருந்திருக்கும். இனவாதி ஒருவரின் முன்னால் சென்று சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கும். அவ்வாறானதொரு விடயத்துக்கு நான் ஒருபோதும் தயாராகவில்லை.

எனது சுயமரியாதையை நான் அதிகம் மதிக்கின்றேன். பதவிகளுக்காக எனது சுயமரியாதையைக் காட்டிக் கொடுக்காத பயணத்தை மேற்கொள்கின்றேன்.

சாம்பலில் இருந்து எழ முயற்சிப்பவர்களுக்கு எதிர்வரும் தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். இந்நாட்டின் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணி அரசை அமைக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவுகளால் முழு நாடும் வங்குரோத்தடைந்தாலும், குறிப்பாக பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை முற்றாகவே சரிந்தது.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மிகுந்த புரிதலுடன் இருந்தார். அவர்களுக்கு குடியுரிமை வழங்குதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

பெருந்தோட்டங்களில் வாழும் மக்களை எப்போதும் தொழிலாளிகளாகவே வைத்திருக்க சிலர் விரும்புகின்றனர். ஐக்கியமக்கள்சக்தி ஆட்சியில் அதை முற்றிலும் மாற்றுவோம். அவர்களுக்கு மிக சிறந்த வாழ்க்கைத் தரத்தை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

அடிமைக் கலாசாரம் ஒழிக்கப்பட வேண்டும். அன்றும் இன்றும் தோட்டங்களில் வாழும் மக்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்ற வேண்டும் எனக் கூறுவது ஒரு ஏற்பாட்டுடனையே ஆகும் - என்றார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உப தலைவரும் நுவரெலியா மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தத் திறப்பு விழாவில், கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மற்றும் இலங்கை

(12ஆம் பக்கம் பார்க்க)




# இன்னும் ஏழு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

# அமெரிக்க லொத்தர் விசா

நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

**0768226244**

**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

## பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகாரிகளே காரண கர்த்தாக்கள்

அரசு விசுவாசம் வேறு;அரசியல்வாதிகள் மீதான விசுவாசம் வேறு.

நமது அரச ஊழியர்களில் பெரும்பாலும் மேல் மட்ட அதிகாரிகளுக்கு இது புரிவதில்லை. அப்படிக் குறிப்பிடுவதை விட, புரிந்தும் புரியாத மாதிரி போன்றே அவர்கள் நடிக்கின்றார்கள் என்று குறிப்பிடுவது பொருத்தம். பெரும்பாலும் அரசியல்வாதிகள் மீதான விசுவாசிகளாகவே அவர்கள் நடந்து கொள்கின்றார்கள் – சம்பளம் தரும் அரசுக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் விசுவாசமாக நடப்பதை விடுத்து.

இதனைத்தான் வேறு வார்த்தைகளில் – முறைகளில் – கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாத் தலைவர் அ.அன்னராசா.

'கடல் அட்டை வளர்ப்பும் யாழ்ப்பாண, தீவகக் கடல்களின் அரசியலும் சூழலியலும்' – என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நூலக மண்டபத்தில் இடம்பெற்ற போது, அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து கருத்துரைக்கும் போதே இந்த விடயத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

'குடா நாட்டில் உரிய ஆய்வுகளும், சட்ட ரீதியான தேவைப்பாடுகளும் நிறைவு செய்யப்படாமல் இடம் பெறும் சட்ட விரோத கடலட்டைப் பண்ணைகள் குறித்து, அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய மாவட்ட அதிகாரிகளே வாய் திறவுங்கள்! உண்மையை வெளிப்படுத்துங்கள்!' என்று அவர் மன்றாடி இருக்கின்றார்.

கடற்றொழில் திணைக்களத்தில் என்று மட்டுமல்ல, நாட்டின் பல முக்கிய நிறுவனங்களில் ஊழல், மோசடிகள், தவறான நிதிக் கையாள்கைகள் போன்றவை எல்லாம் தாராளமாக நடக்கின்றன. ஊழல், மோசடிகள் மலியாத திணைக்களங்கள், அரசு அலுவலகங்களே இலங்கையில் இல்லை என்று கூறும் அளவுக்கு நிலைமை.

இந்த அவல நிலைமை – மோசமான கட்டம் – நீடிப்பதற்குப் பிரதான காரணம் இந்த விடயங்களில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் தமது கடமைகளுக்கு மாறாக, அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கு மிகவும் விசுவாசமாகச் செயல்படுவதுதான்.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில், இங்கு யாழ் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைமை மூலம் பல குளறுபடிகள் பண்ணப்பட்டன. அந்தக் குளறுபடிகள் சத்தம் சந்தடியின்றி, அரங்கேறியமைக்கு பிரதான காரண கர்த்தாக்களாக விளங்கியவர்கள் நமது செயலக அதிகாரிகள்தான். விடயங்களை வேண்டுமென்றே மூடி மறைத்து, அந்த அரசியல்வாதியைக் காப்பாற்றி, தங்கள் விசுவாசங்களை வெளிப்படுத்தி கொண்டார்கள் அந்த அதிகாரிகள்.

அதே போக்கு எல்லா அரசு திணைக்களங்களிலும் இன்று தாராளம். அரசு அல்ல, மக்கள் அல்ல, நாடு அல்ல, அவற்றுக்கு அப்பால் அரசியல்வாதிகளே தங்களுக்கு முக்கியம், அவர்களுக்கே விசுவாசம் காட்டுவோம் என்று உயர்நிலை அதிகாரிகள், ஊழல் – மோசடிகளுக்கு துணை போனமைதான், இன்றைய இழி நிலைமைக்குப் பிரதான காரணமாகும்.

இப்போக்கிலிருந்து உயர் அதிகாரிகள் வெளியே வந்து, நாடு ,மக்கள், சட்டம் என்று நீதியாக செயற்பட முன் வர வேண்டும்.

## மேல்மாகாண பாடசாலைகளை இலக்காகக் கொண்டு விழிப்புணர்வு குழுக்களை நிறுவ ஏற்பாடு வேண்டும்!

### பிரசன்ன ரணதுங்க வலியுறுத்து



மேல்மகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை பரவுவதை தடுக்க பெற்றோர்கள், ஆசிரியர்கள், வலய அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து 'விழிப்புணர்வு குழுக்களை அவசரமாக நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை விடுத்தார்.

கம்பஹா மாவட்டக் குழு பொலிஸாருக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கும் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இவ்வாறு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதேவேளை பிரசன்ன ரணதுங்க, மேல் மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் மேல்மாகாண பாடசாலைகளை மையப்படுத்தி இவ்வாறான குழு உருவாக்கப்பட்டிருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கிராமப்புறங்களில் உள்ள சிறுவர்களே போதைப்பொருள் வியாபாரிகளின் இலக்காக இருப்பதால் பாடசாலைகளைச் சுற்றி சோதனைகளை நடத்த வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ராஜபக்ஷக்களை நாட்டு மக்கள் முழுமையாக நிராகரிக்கவேண்டும்!

### சரத் பொன்சேகா வலியுறுத்து



நாட்டு மக்கள் தற்போது அனுபவிக்கும் துயரங்களுக்கு தாமே காரணம் என்பதை உணராமல், மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகக் கூறும் ராஜபக்ஷக்களின் ஆட்சி அமைக்கப்பட்டால், தற்போதுள்ளதை விட கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

எனவே, மக்கள் அவர்களை முழுமையாக நிராகரிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்டோரை பார்வையிடுவதற்காக அங்கு சென்றிருந்த சரத் பொன்சேகா ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு முறையான சுகாதாரமான சூழலை ஏற்படுத்திக் கொடுக்காமையே அவர்கள் நோய்களுக்குட்பட பிரதான காரணமாகும். இது அவர்களின் அடிப்படை உரிமை மீறலாகும்.

எனவே, இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம்.

மக்கள் அனுபவிக்கும் துன்பத்தை உணர்ந்துகொள்ள முடியாவிட்டால், அந்தத் துயரத்துக்குத் தாமே காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளாவிட்டால், இவ்வாறான ராஜபக்ஷக்களை மீண்டும் தெரிவுசெய்துவிட வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ராஜபக்ஷக்களுக்கு இன்றும் அதிகாரப் பேராசை காணப்படுகிறது. இதுவரை கொள்ளையடித்து, அதில் திருப்தியடைய முடியாமலேயே அவர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெறுவோம் என்று பேசிக் கொண்டிருக்கின்றனர்.

எனினும், அவர்கள் முன்னெடுக்கும் இந்த முயற்சி ஒழுக்கமானதல்ல. இவ்வாறான செயற்பாடுகளுக்கு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் வரவேற்பிருக்காது.

எனவே, ராஜபக்ஷக்களை மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும். மாறாக, அவர்களது ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தினால் தற்போதுள்ளதை விட பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். – என்றார்.

## யானைக்கான மின்சார வேலி ஹபரணையில் அமைக்கப்பட்டது






60 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவி வரும் யானைகளின் அச்சுறுத்தலால் மக்கள் பலியாகியதன் விளைவாக, உலகில் அதிக மனித – யானை மோதல் உள்ள நாடாக இலங்கை மாறியுள்ளது.

அதற்கு தீர்வாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் முயற்சியின் கீழ், ஹபரணை பிரதேசத்தில் மாதிரி வேலியாக, ரித்திகலவை அண்மித்த பண்டிவெள கிராமத்தில் 4.4 கிலோமீற்றர் பரப்பளவில் சமூக அடிப்படையிலான மின்சார வேலி அமைக்கப்பட்டு சனிக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டது.

ஜனவரி 2022 இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனம், சினோமன் ஹோட்டல் குழுமம் மற்றும் ரி.யு.ஐ அறக்கட்டளை ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாகும்.

மேலும், சமூகத்துக்கான தேசிய இயக்கத்தின் தலைவரான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, 30 வருடங்களுக்கும் மேலாக இந்த விடயத்தில் ஆய்வு செய்து வரும் கலாநிதி பிருதுவிராஜ் பெர்னாண்டோ மற்றும் கலாநிதி சுமித் பிலப்பிட்டிய ஆகியோர் இந்தத் திட்டத்திற்கு வளங்களை வழங்கினர்.

## கந்தசஷ்டி சிறப்பு



ஆறிரு தடந்தோள் ஐயா போற்றி
அருமறை போற்றும் முருகா போற்றி
கூறுசெய் வடிவேல் குமரா போற்றி
குன்றுகள் தோறும் அமர்ந்தாய் போற்றி

மாறில்லா வள்ளி மணாளா போற்றி
மஞ்சையில் ஏறி வருவாய் போற்றி
குக்குடக் கொடியை உடையாய் போற்றி
குவலயம் உய்ந்திட உதித்தவா போற்றி

முருகா போற்றி மால்மருகா போற்றி
உருகிடும் அடியார் உளமுறைவாய் போற்றி
பொருதிடு குணத்தை ஒழிப்பாய் போற்றி
புவனமே போற்றிடும் குமரா போற்றிபோற்றி

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

# பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் மாத்திரமே சரணாலயங்களுக்குள் பிரவேசிக்க முடியும்!

## ஜனாதிபதி உத்தரவு

யால, வில்பத்து மற்றும் ஹோர்டன் சமவெளி உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள சவாரி வாகனங்களைத் தவிர்த்து வேறு எந்தவொரு வாகனத்துக்கும் பிரவேசிப்பதற்குத் தடை விதித்தல் போன்ற சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டங்களை உள்ளடக்கிய புதிய சட்ட மூலமொன்றை விரைவில் தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேற்படி சட்ட மூலம் தயாரிக்கப்படும் வரை இந்த தேசிய சரணாலயங்களுக்குள் பதிவு செய்யப்பட்ட வாகனங்களைத் தவிர, வேறு எந்த வாகனமும் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்படக் கூடாது என்றும் ஜனாதிபதி உத்தரவு விடுத்துள்ளார்.

அத்தோடு சிவனொளிபாதமலையை அண்மித்த வனம் மற்றும் சிங்கராஜ வனம் போன்ற சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்கு தனியான சட்டங்களை உடனடியாக உள்ளடக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஹோர்டனிலிருந்து பட்டிப்பொல வரையும், ஒஹியோவிலிருந்து போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக சுற்று சூழலுக்கு ஏதுவான இலத்திரனியல் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். இது தவிர கெபலித்த புனித பூமியை பாதுகாப்பதற்கான சட்டத்தை இயற்றுமாறும் குறிப்பிட்டுள்ளார்.



நாட்டில் வனப்பரப்பு 35 சதவீதம் என்ற குறைவான அளவிலேயே காணப்படுவதால், வனப்பகுதியை சேதப்படுத்தும் எந்தவொரு திட்டத்துக்கும் இடமளிக்கக் கூடாது எனவும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களிலும் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

யால, வில்பத்து மற்றும் ஹோடன் போன்ற சுற்றுச் சூழலுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலத்திரனியல் வாகனங்களைப் பயன்படுத்துவதை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுத்தியுள்ள ஜனாதிபதி, இயற்கையின் அழகைப் பாதுகாப்பது தொடர்பான புதிய சட்டங்களும் இந்தச் சட்டத்தில் சேர்க்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யால, வில்பத்து, ஹோர்டன் சமவெளி போன்றவற்றில் சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள பணிப்புரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காணாமல்போனோர் பற்றிய அலுவலக தலைவரின் கருத்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் கருத்தை ஒத்தது!

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.31

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்தவால் வெளியிடப்பட்டுள்ள கருத்து, கடந்த 2020 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட கருத்தை ஒத்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு, இது தொடர்பாகத் தமது கரிசனையையும் வெளிப்படுத்தியுள்ளது.

படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல்போனமைக்கான ஆதாரங்கள் இல்லை என்றும், காணாமல்போனோரில் பெரும்பான்மையானோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தால் அல்லது அதற்கு எதிரான குழுக்களாலேயே கடத்தப்பட்டார்கள் என்றும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்திருக்கிறார் என ரொய்ட்டர் செய்திச்சேவையில் கடந்த வியாழக்கிழமை வெளியான செய்தி பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.

இறுதிக்கட்டப் போரின்போது தமது உறவினர்களைப் படையினரிடம் கையளித்ததாகவும், அவர்கள் காணாமல் போயிருப்பதாகவும், அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் பல வருடங்களாகத் தொடர்ச்சியாகக் கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேபோன்று படையினரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னரும் சரணடைந்ததன் பின்னரும் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூகக் கட்டமைப்புக்கள் ஆவணப்படுத்தியுள்ளன. அவை தொடர்பாகக் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் அறியவில்லையா? என்று பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பிவருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த விவகாரம் தொடர்பில் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு, காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்தவால் வெளியிடப்பட்டுள்ள கருத்து தொடர்பில் தாம் கரிசனையடைவதாகத் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி மகேஷ் கட்டுலந்தவின் கருத்து கடந்த 2020 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்ட கருத்தை ஒத்ததாகக் காணப்படுவதாகவும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் சர்வதேச மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் தம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கான பிரதிபலிப்பாக இலங்கை தமது உள்ளகப்பொறிமுறையை ‘விளம்பரப்படுத்திவரும்’ வேளையிலேயே இவ்வாறானதொரு கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றது என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் சைக்கிளில் வேலைக்கு சமுகமளிக்க திட்டம்

நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் சைக்கிளில் வேலைக்குச் சமுகமளிக்கும் சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

உலக நகரங்கள் தினத்தை முன்னிட்டு ஒக்ரோபர் 31 திங்கட்கிழமை (இன்று) முதல் வாரத்தில் ஒரு நாள் சைக்கிள் வேலை திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்பாடு செய்கிறது.

இதன்படி, , நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சைக்கிள்களைப் பயன்படுத்தி வேலைக்குச் சமுகமளிக்க வேண்டும்.

இந்நிலையில், சைக்கிள் வாங்குவதற்கான நிதி மற்றும் சைக்கிளை பாதுகாப்பாக நிறுத்த இடம் ஒதுக்குவது உட்பட, சைக்கிளில் வேலைக்குச் செல்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் அதன் ஊழியர்களுக்கு வழங்கப்படும் என நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் ‘சைக்கிள் வெள்ளி – துவிச்சக்கர வண்டியில் வேலைக்கு செல்வோம்’ நிகழ்ச்சித்திட்டத்தின் அங்குராப்பணம் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு நவம்பர் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பத்தரமுல்ல செத்சிறிபாய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நுட்பியல் அவத்தை

## நம்மைச் ஆக்கிரமிக்கும் செயலிகள்

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நம்மைச் சூழ்ந்துள்ள நுட்பியல் அவத்தையில் அகப்பட்டுள்ளோம். தற்போது செயலிகளால் நாம் சூழப்பட்டுள்ளதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். எம்மை பல செயலிகள் நாளாந்தம் சூழ்ந்து கொண்டிருக்கின்ற அதே வேளை நாம் பார்த்த பல செயலிகளை இணைத்தில் காணவில்லை. கடந்த வாரமும் சில செயலிகள் இணையப்பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. இப்போது கடந்தவாரம் நீங்கள் பயன்படுத்திய செயலியை இப்போது தேடினால் அது Google Play Store இல் இருக்காது. அது ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இப்போது எங்கும் காணப்படவில்லை. ஏன் என்ன நடந்தது.? இவ்வாறு Android பயன்பாடுகள் Play Store இலிருந்து காணாமல் போவதற்கு பல காரணங்கள் உள்ளன.

எடுத்துக்காட்டாக, அதை உருவாக்கியவர்களே Google Play Store இலிருந்து தமது பயன்பாட்டை நீக்கலாம். அல்லது Google Play Store அதன் கொள்கைகளில் ஒன்றை மீறியதற்காக அதை அகற்றலாம். வேறும்பல காரணங்கள் உண்டு இந்தக் கட்டுரையில், Google Play Store இலிருந்து Android பயன்பாடுகள் அகற்றப்படுவதற்கான காரணங்களைப் பார்க்கலாம்.




### 1. உருவாக்கியவர் செயலியை அகற்றுகிறார்

சில நேரங்களில், உருவாக்கியவர் தாங்களே அதை அகற்றியதால், பிளே ஸ்டோரில் இருந்து அந்த ஆப் மறைந்துவிடும். இதற்கு பல காரணங்கள் இருக்கலாம்.

ஆண்ட்ராய்டு ஒரு வளர்ந்து வரும் இயக்க முறைமையாகும், அதற்கேற்ப செயலியின் பயன்பாட்டைப் புதுப்பித்துக்கொள்ள நேரமோ விருப்பமோ இல்லை. அல்லது செயலியின் புதிய மறு செய்கையை வெளியிட்டிருக்கலாம், அதனால் குழப்பத்தைத் தவிர்க்க அசலை அகற்றியிருக்கலாம்.அல்லது உருவாக்கியர் தனது செயலி பலரை அடிமையாக்குகிறது என்ற குற்ற உணர்வாலும் அதை அகற்றலாம்.

2014 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், Flappy Bird விளையாட்டு உலகையே புயலால் தாக்கியது. ஆதனை உருவாக்கிய டோங் நுயென் ஒரு நாளைக்கு 50,000 டொலர் கேம் விளம்பரம் மூலம் சம்பாதித்தார். பின்னர், அது ஒரு 'அடிமையாக்கும் தயாரிப்பு' மற்றும் 'ஒரு பிரச்சனையாக' மாறியது, இதனால் குற்றவுணர்வால் அதனை உருவாக்கியவனே அதனை நீக்கிவிட்டார்.

### 2. ஆண்ட்ராய்டு அனுமதிகளை தவறாகப் பயன்படுத்துதல்

உங்கள் மொபைலில் உள்ள ஒவ்வொரு பயன்பாட்டிற்கும் இயங்க அனுமதி தேவை, ஆனால் சிலவற்றிற்கு மற்றவற்றை விட அதிக அனுமதி தேவை. ஆண்ட்ராய்டில், உங்கள் கேமரா, மைக்ரோ போன் அல்லது தொடர்புகள் போன்றவற்றுக்கான அணுகல் தேவைப்படும்போது, ஆப்ஸ் உங்களைத் தூண்டும்.

இந்த கோரிக்கைகள் நியாயமானதாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, உங்கள் கேமராவை அணுகும் வரை Instagram இல் உங்கள் வீடியோக்களை எடுக்க முடியாது. ஒரு நல்ல பயன்பாட்டிற்கு ஏன் குறிப்பிட்ட அனுமதி தேவை என்பதை தெளிவாக விளக்கி, அதை இயக்கும்படி கேட்க வேண்டும்.

சில செயலிகள் அவ்வளவு தெளிவாக இல்லை. பயன்பாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்க்காத தரவு, ஆடியோவைப் பதிவுசெய்தல், தொலைபேசி அழைப்புகளைத் தொடங்குதல் மற்றும் பிற ஆக்கிரமிப்பு பணிகளைச் செய்ய அவை வடிவமைக்கப்பட்டுள்ளன. துரதிர்ஷ்டவசமாக, சில தீங்கிழைக்கும் செயலிகள் இந்த அனுமதிகளை கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளும் பயனர்களை வேட்டையாடுகிறார்கள்.

எனவே, ஆண்ட்ராய்டின் அனுமதிகளைத் தவறாகப் பயன்படுத்தி பயனரிடம் அதிகம் கேட்கும் செயலிகளை கூகுள் நீக்கியுள்ளது.

### 3. பதிப்புரிமை மீறல்

சில நிறுவனங்கள் தங்கள் நற்பெயரைப்பாதுகாக்க வேண்டியிருக்கின்ற போது தமது பிறாண்ட ஏனையவர்களால் பயன்படுத்தப்படுவதை விரும்பமாட்டார்கள், இதனால், பதிப்புரிமையைப் பாதுகாக்க வேண்டும், அதனால்தான் சில பயன்பாடுகள் அகற்றப்படுகின்றன.

### 4. அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டது

சில சமயங்களில், அரசாங்கம் மக்களுக்குப் பாதிப்புத் தருகின்றது என்ற கருத்தினடிப்படையில் கூகிள் பிளே ஸ்டோரிலிருந்து ஒரு பயன்பாட்டை நீக்க கட்டாயப்படுத்தலாம். இது நாட்டிற்கு நாடு மாறுபடும்.

ஆஸ்திரியா அதன் சூதாட்டச் சட்டங்களை மீறும் பயன்பாடுகளை தடைசெய்தது, அதன் ஆபாசச் சட்டங்களுக்காக சீனா மற்றும் அதன் தனியுரிமைச் சட்டங்களுக்காக குவைத் ஆகியவை இதற்கு முந்தைய உதாரணங்கள் ஆகும்.

### 5. Google Play Protect ஆல் மதிப்பாய்வு செய்யப்பட்டு நீக்கப்படுவது

Google Play Protect என்பது Google Play Store இல் உள்ள தீங்கிழைக்கும் பயன்பாடுகளிலிருந்து உங்களைப் பாதுகாக்க முயற்சிக்கும் ஒரு சேவையாகும். நீங்கள் எந்த பயன்பாட்டையும் பதிவிறக்கும் முன், Google Play Protect அதை ஸ்கேன் செய்து, அது தீங்கு விளைவிக்கவில்லை என்பதைச் சரிபார்க்கும். அதில் தேர்ச்சிபெறவில்லை என்றால் அதனை நீக்கிவிடும்.

அதாவது ஒரு செயலி தரவிறக்கி நிறுவும் போது உங்களை ஏமாற்ற முயற்சிக்கிறது அல்லது பிற பயன்பாடுகளுடன் ரகசியமாக தொகுக்கப்பட்டுள்ளது. உங்களுக்குத் தெரியாமல் உங்கள் தரவைச் சேகரித்து அனுப்புகிறது. அதன் முதன்மை நோக்கம் மற்றும் செயல்பாடு பற்றி வெளிப்படையாக இல்லை.




இதனை Google Play Protect தீங்கிழைக்கும் பயன்பாட்டைக் கண்டறிந்தால், அதை Play Store இலிருந்து அகற்றும். இவ்வாறான சந்தர்ப்பங்களில், உங்கள் சாதனத்திலிருந்து ஆப்ஸ் தானாகவே அகற்றப்பட்டதாகக் கூறுவதற்கான அறிவிப்பைப் பெறுவீர்கள் அல்லது சில நேரங்களில், நீங்கள் பயன்பாட்டை நிறுவல் நீக்க வேண்டும் என்று ஒரு எச்சரிக்கை அறிவிப்பு கிடைக்கும்.

கூகுள் ப்ளே ஸ்டோர் பொதுவாக பாதுகாப்பானது என்றாலும், சில பாதுகாப்பற்ற விடயங்கள் கொண்ட செயலிகள் நழுவி தப்பி விடுகின்றன. ஆதனால் எப்போதும் புத்திசாலித்தனமாக இருக்க வேண்டும் கூகிளை மட்டுமே நம்பியிருக்க முடியாது. நம்பகமான செயலிகளிடமிருந்து மட்டுமே பயன்பாடுகளை நிறுவுங்கள்.

இந்த அடிப்படையில் அண்மையில் கூகிள் 16 செயலிகளை பிளேஸ்ரோரிலிருந்து அகற்றியுள்ளது




ஆண்ட்ராய்டு சாதனங்களில் வேகமான பேட்டரி செயலிழப்பு அல்லது வடிதல் மற்றும் அதிக டேட்டா உபயோகத்தை ஏற்படுத்தும் 16 ஆப்களை கூகுள் தனது ப்ளே ஸ்டோரில் இருந்து நீக்கியுள்ளதாக கூறப்படுகிறது. அகற்றப்பட்ட பயன்பாடுகள், உண்மையான பயனராக ஆள்மாறாட்டம் செய்யும் விளம்பரங்களைக் கிளிக் செய்ய பின்னணியில் உள்ள வலைப் பக்கங்களுக்குத் திருப்பிவிடுவதன் மூலம் விளம்பர மோசடியைச் செய்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை இந்த ஆப்ஸ் ஸ்டோரிலிருந்து அகற்றப்படுவதற்கு முன்பு 20 மில்லியன் பதிவிறக்கங்கள் இருந்ததாக கூகிள் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனை McAfee ஆல் கண்டறியப்பட்டது. இந்த பயன்பாடுகள் பொதுவாக பயனர்களை QR குறியீட்டை ஸ்கேன் செய்து இணைக்கப்பட்ட இணையதளத்தைப் பார்வையிட அனுமதிக்கிறது. இதன்வழி அவை தானாகவே குறியீட்டைப் பதிவிறக்கும், பயனருக்குத் தெரிவிக்காமல் இணையத் தளங்களை அணுகுவதற்கான அறிவிப்புகளைப் பெறுகின்றன, மேலும் இணைப்புகள் மற்றும் விளம்பரங்களைக் கிளிக் செய்கின்றன. இது விளம்பர மோசடியின் ஒரு நிகழ்வாக இருக்கிறது. ஏனெனில் இது உண்மையான பயனராக ஆள்மாறாட்டம் செய்து விளம்பரங்களின் தொடர்புகளை (கிளிக்) செயற்கையாக அதிகரிக்கும்.

அண்மையில் இந்த மொசடியால் கூகிள் தனது பிளேஸ்ரோரிலிருந்து நீக்கிய 16 செயலிகளின் விவரங்கள்,

1. High-Speed Camera
2. Smart Task Manager
3. Flashlight+
4. com.smh.memocalendar memocalendar
5. 8K-Dictionary
6. BusanBus
7. Flashlight+
8. Quick Note
9. Currency Converter
10. Joycode



11. EzDica
12. Instagram Profile Downloader
13. Ez Notes
14. com.candlencom.flashlite
15. com.doubleline.calcul
16. com.dev.imagevault Flashlight+

காலைக்கதிர் Kalaikkathir

# ராஜபக்ஷாக்களை மீண்டும் அரசியலுக்குள் கொண்டு வர ஜனாதிபதி அரசியல் சூழ்ச்சி!

## சமிந்த விஜேசிறி எம்.பி. காட்டம்



நாட்டினுள் பாரிய பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி, ராஜபக்ஷக்களே சிறந்தவர்கள் அவர்களால் மாத்திரமே மீண்டும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று மக்களை நம்பவைப்பதற்கான அரசியல் சூழச்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார்.

அவரது பதவியை தக்க வைத்துக் கொள்வதற்காகவே இந்த சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ராஜபக்ஷக்கள் தமது தோல்விகளை மறந்து, தம்மால் மீண்டும் வெற்றி பெற முடியும் என்ற காரணியை ஒவ்வொரு மாவட்டங்களிலும் சென்று கூறிக் கொண்டிருக்கின்றனர். ராஜபக்ஷக்கள் வீடுகளில் தலைமறைவாகியிருந்தனர்.

இவ்வாறு தலைமறைவாகியிருந்தவர்கள் இன்று வெளியில் வந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதாகக் கூறுகின்றனர். இதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பொறுப்புக் கூற வேண்டும்.

கொள்ளையர்களுடன் இணைந்து, மற்றொரு கொள்ளைக் கூட்டத்தை உருவாக்குவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

தற்போது பாரதூரமான வரி அதிகரிப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் நாமல் ராஜபக்ஷ, 'எமது ஆட்சி காலத்தில் இவ்வாறு வரி அதிகரிப்புக்கள் இடம்பெறவில்லை.' என்று கூறுகின்றார். அவ்வாறெனில் தற்போதிருப்பது யாருடைய அரசாங்கம்? ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கமா?

தற்போதுள்ள அமைச்சரவையில் அங்கத்துவம் வகிப்பவர்கள் அனைவரும் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்துவபர்களே என்பதை நாமல் ராஜபக்ஷவிற்கு நினைவுபடுத்துகின்றோம்.

வரி சலுகைகள் மூலம் கொள்ளையிட்ட கூட்டத்துடன் இணைந்து சர்வதேச நாணய நிதியத்தைக் காட்டிக் கொடுத்து மேலும் வரி அதிகரிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாராகிக் கொண்டிருக்கின்றார்.

இந்த வரி அதிகரிப்பு மூலம் சிறு தொழில் மற்றும் ஏற்றுமதித்துறை பாரியளவில் பாதிக்கப்படும். இதன் காரணமாகத் தற்போதிருப்பதை விட பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

இது ஓர் அரசியல் சூழ்ச்சியாகும். இது நாமல் ராஜபக்ஷவிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ராஜபக்ஷாக்களே சிறந்தவர்கள் என்றும், அவர்களால் மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் மக்களுக்கு காண்பிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் சூழ்ச்சிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

பதவி நீங்கும் காலத்தில் மீண்டும் அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே அவர் இவ்வாறு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

எனவே மீண்டும் ராஜபக்ஷாக்களை அரசியலுக்குள் கொண்டு வருவதற்காக நாட்டினுள் பாரிய பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தி, ராஜபக்ஷாக்களை நாட்டை மீட்பார்கள் என்று மக்களை நம்ப வைப்பதற்காகவே இந்த சூழ்ச்சி முன்னெடுக்கப்படுகிறது. எனினும் இந்த சூழ்ச்சி வெற்றியளிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் இடமளிக்காது. – என்றார்.

# சில முஸ்லிம் அமைப்புகளின் தடைகள் விரைவில் நீங்கும்: பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் உரிய தரப்புடன் பேச்சு!

## என்கிறார் ஹரீஸ் எம்.பி.



(நூருல் ஹுதா உமர்)

பாதுகாப்பு அமைச்சின் தடைப் பட்டியலில் உள்ள 11 முஸ்லிம் அமைப்புகளில் 6 அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளக எனவும், இதன் முதற்கட்ட நடவடிக்கையாக குறித்த 6 அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் அண்மையில் கலந்துரையாடியுள்ளனர் எனவும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

தங்களது வேண்டுகோளில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்தார். 11 முஸ்லிம் அமைப்புக்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 6 அமைப்புகள் எவ்வித பயங்கரவாத சம்பவங்களுடனோ பயங்கரவாத அமைப்புகளுடனோ தொடர்பைக் கொண்டிருக்கவில்லை. எனவே, இவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டுமென நானும் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இாக் ரஹ்மானும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார். இதனடிப்படையில் தடை செய்யப்பட்ட குறித்த 6 அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தனித்தனியே கலந்துரையாடியுள்ளனர்.

மேலும், குறித்த 6 முஸ்லிம் அமைப்புகளிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சால் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் கிடைத்தவுடன் அதிகாரிகள் அதனை பரிசீலனை செய்து 6 அமைப்புகள் மீதான தடையை நீக்கவுள்ளனர் என்று மேலும் தெரிவித்தார்.

# பாடசாலைக்கு முன்பாக கழிவுகளை வீசியவருக்கு எதிராக நடவடிக்கை!



யாழ்ப்பாணத்தில் பாடசாலை ஒன்றுக்கு முன்பாக மனித மலக்கழிவு உள்ளிட்டவற்றை வீசியவர் தொடர்பில் பல்வேறு தரப்பிடமும் முறையிடப்பட்டுள்ளது.

பாடசாலை முன்பாக பம்பஸ் உள்ளிட்ட கழிவுகள் வீசப்பட்டிருந்தன. அதனால் பாடசாலைக்கு அருகில் வசிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

அது தொடர்பில் மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மாநகர சபை சுகாதார ஊழியர்கள் அவற்றை அகற்றும் போது, அதனுள் மோட்டார் சைக்கிள் காப்புறுதி அட்டை ஒன்று மீட்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கழிவுகளை அவரே வீசி இருக்கலாம் என சந்தேகிப்பதால் அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உலக இராணுவ சக்திகளின் விளையாட்டு மைதானமாக இந்தியப் பெருங்கடல் இருக்கக்கூடாது என்கிறது அரசு!

இந்தியப் பெருங்கடல் உலக இராணுவ சக்திகளின் மோதலுக்குரிய பகுதியாகவோ அல்லது விளையாட்டு மைதானமாகவோ இருக்கக்கூடாது என இலங்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வது, நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் முழுவதும் உள்ள கடல்சார் இராஜதந்திரத்தை மற்ற பெருங்கடல்களுடன் இணைவதற்கு மேலும் வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கை எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் பங்கேற்காது என்றும், பசுபிக் பிராந்தியத்தின் பிரச்சினைகள் இங்கு வருவதை விரும்பவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக வல்லரசுகளின் போட்டியிலிருந்து இலங்கை எப்போதுமே விலகி இருக்கும் என்றும் இந்தப் போட்டிகள் எதுவும் இந்தியப் பெருங்கடலில் மோதலுக்கு வழிவகுக்காது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# கொரோனாக் கட்டுப்பாடுகள் சுற்றறிக்கையை நீக்க முடிவு!

கடந்த சில மாதங்களுக்கு முன்னரே, டீசல் விலை குறைக்கப்பட்ட போதிலும் பஸ் கட்டணத்தை குறைக்க தடையாக உள்ள 'கொவிட் கட்டுப்பாட்டு' சுற்றறிக்கையை நீக்குவதற்கு சுகாதார அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளதாகப் போக்குவரத்து அமைச்சகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொவிட் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக, ஆசன எண்ணிக்கைக்கு அமையவே பொதுப் போக்குவரத்து பஸ்களில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என்று சுகாதார அமைச்சகம் விடுத்திருந்த சுற்றறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளதால், பஸ் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட 10 சதவீத கூடுதல் பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியவில்லை.

ஆகவே, இந்த கொவிட் கட்டுப்பாடு சுற்றிக்கை நீக்கப்படும் பட்டசத்தில் பஸ் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ள முடியும் என அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 166**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## கலைஞரும் தி.மு.கவும்




போர் தொடங்கி நடத்தப்பட்ட காலங்களில் கலைஞரது தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியில் இருந்தது. போரின் கடைசி நாள்களில் கலைஞர் மெரினாக் கடற்கரையில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்று உண்ணாவிரதம் தொடங்கினாலும், மக்களுக்கு எதிராக கனரக ஆயுதங்கள் பாவிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா அரசு கொடுத்த உறுதிமொழிகளால் அவர் அதனைக் கைவிட்டார்.

கலைஞருக்கு அந்த நேரங்கள் தர்ம சங்கடமான நிலை ஆயினும், மத்திய அரசின் தீவிரத்தை அவரால் நிறுத்த முடியவில்லை. சிதம்பரத்தின் முனைப்பின் பின்னணியில் ஆதரவு தந்தாலும் விடுதலை புலிகளுடன் இருந்த தொடர்புகளில் அவர்கள் மேல் அழுத்தம் தரக்கூடிய நிலையில் அவர் இருக்கவில்லை. போரில் முடிவில் தமிழ்நாட்டிலும் புலம்பெயர் மக்களாலும் கலைஞர் மீதும் தி.மு.க. மீதும் எறியப்பட்ட சாணிகளை முற்றிலுமாக நீக்க அவர் பாடுபட்டாலும், போரின் கோரங்களும், மரணித்த மக்கள் தொகையும், மானபங்கம் செய்யப்பட்ட தமிழ் பெண்களின் பரிதாப நிலைகளும் எறிந்த சாணிகளை நீக்கிக் கொள்ள வழிதரவில்லை.

பிரபாகரனது சென்னை நாள்களில் அவரை அறிந்திருந்து, பழநெடுமாறனுடன் இணைந்து உதவிகள், செய்து பின் 'பாண்டி பஜார்' வழக்குகள் எழுந்த போது ஆஜராகி, பிணை இருந்த காலங்களில் தனது வீட்டிலேயே வைத்து பாதுகாத்த வழக்கறிஞர் இராதாகிருஷ்ணனின் உதவியுடன் ஒகஸ்ட் 2012 இல் தமிழ் ஈழ ஆதரவாளர்கள் மாநாட்டை நடத்தி தி.மு.கவுக்கு எதிராக வைக்கப்பட்ட காரசாரமான விமர்சனங்களுக்கு விளக்கங்கள் தர முயற்சிகள் செய்தார் கலைஞர். வாக்கு அரசியலில் வைகோ, ஜெயலலிதா, சீமான் போன்ற அரசியல்வாதிகள் தி.மு.க. காங்கிரஸுடன் கூட்டாக இருந்ததால், கலைஞரும் இணைந்துதான் இந்தியப் படைகளை அனுப்பி, தமிழ் மக்களின் இன வழிப்பைச் செய்தார் என பரப்புரையும் முன்னெடுத்தார்கள். வாக்கு அரசியலுக்காக இவை செய்யப்பட்டாலும், நடந்தவற்றினால் தி.மு.கவுக்கும் கலைஞருக்கும் இந்தப் பிரசாரங்கள் பலத்த அவப்பெயரைச் சம்பாதித்து கொடுத்தன.

இராதாகிருஷ்ணன் மூலம் அவருக்கு ஈழத்தமிழ் மக்களிடையே இருந்த தொடர்புகளைப் பாவித்து அவரது ஆக்கங்களின் மூலம் தனது சிந்தனைகளையும் எண்ணங்களையும் பகிர்ந்தமை மட்டுமல்லாமல், மாநாடு முடிந்த கையுடன் நடந்த ஜெனிவா மனித உரிமைகள் மன்றின் கூட்டங்களுக்கு இராதாகிருஷ்ணனையும், மகன், தற்சமயம் முதலமைச்சராகி விட்ட ஸ்டாலினையும் பிரதிநிதிகளாக அனுப்பி, அங்கும், பின் லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட பல புலம்பெயர் சந்திப்புகளிலும் தி.மு.கவின் நிலைப்பாட்டை விளக்கினார். இராதாகிருஷ்ணன் இன்னும் ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய கரிசனைகளுடன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஸ்டாலின் அக்கறை காட்டுகிறார். ஆனாலும் தமிழ் மக்கள் தங்களது தீர்வுகளைப் பற்றி குடுமிப் பிடி சண்டையில் இருக்கிறார்கள்.

அதேசமயம் சீமான் போன்ற தலைவர்களின் விமர்சனங்கள் போரை ஒட்டி வருவது தி.மு.கவிற்கு தவிர்க்க முடியாதது. தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் யார், யார் நடத்திய அரசியலிலே அவர்கள் பட்ட ரணங்களும் வேதனைகளும் நிஜம்.




### வலிகளும் வேதனைகளும்

நடந்தவை பற்றி எவ்வளவோ ஆக்கங்களும் விமர்சனங்களும் இன்றுவரை தொடர்கின்றன. சர்வதேச மனித உரிமை மன்றுகூடசாட்சிகள் இல்லாமல் நடத்தப்பட்ட படுகொலைகளையும், மனித உரிமை மீறல்களையும், மனிதாபிமானமற்ற நடப்புகளையும், மனித குலத்திற்கு எதிரான செயற்பாடுகளையும், விசாரணை செய்ய முனைப்புகள் எடுக்கிறது. அவர்களது எத்தனையோ அறிக்கைகள் வந்து சேர்ந்து விட்டன. ஆனாலும் அந்த நாள்களின் ஆதிமூலத்தில் நடந்த கருமாதிகள் பரம் பொருளுக்குத்தான் வெளிச்சம்.

மக்கள் பட்ட அவஸ்தைகளையும் அவர்களது உளரீதியான பாதிப்புகளையும் உடனடியாகவே நேர்முக சாட்சியங்களில் இருந்து பதியப்பட்ட ஆவணங்களிலிருந்து தொகுக்கப்பட்ட ஆராய்வு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னைய உளவியல் துறை பேராசிரியர் தயா சோமசுந்தரத்தினால் 'வன்னி கனவுகள்' (vanni narratives என பதிவு செய்யப்பட்டன. சுய விமர்சனம் தேடும் யாவரும் எங்கள், நாங்கள், இந்தத் துன்ப நிகழ்வுகளுக்காக அளித்த பங்குகளை விளங்கிக் கொள்ள இதனைப் படிக்க வேண்டும்.

இளம் வயது விடுதலை ராணுவப் போராளியாக இருந்து, 2010 இல் ஏக்கப் பெருமூச்சுகளுடன் 'மரங்கள்' என்ற தலைப்பில் சிவதாஸ் என்ற சிறுவன் ஆய்வுகளுக்காக தனது எண்ணங்களையும் ஏக்கங்களையும் எழுதி தந்த கவிதையை அந்த ஆவண முடிவாக தயா சோமசுந்தரம் தருகிறார்.

"எங்கள் வாழ்க்கையில்
நிம்மதி என்பது இல்லை
எங்கள் மரங்களில்
உயிர்கள் இல்லை
இறந்து போனவை விறகாகி விட்டன
பசுமையாக இருப்பவை ஏதோ நிழல் தருகின்றன
பார்வையாளனே
நீங்கள் எங்களுக்குச் சொல்லுங்கள்
நாங்கள் எந்த மரம்
எங்களது துயரையும் ஏக்கத்தையும்
நீங்கள் பகிர்வீர்களா?
எங்களது கண்ணீரைத்துடைப்பீர்களா?
நிழல் தரக்கூடிய மரங்களுக்காக
நாங்கள் காத்திருக்கிறோம்."

ஆனால் தமிழ் மக்கள் வழமை போலவே எதிர்நோக்குவது என்ன? அதிகாரங்களுக்காக பெரும்பான்மை சிங்கள மக்களிடையே வாக்குப் பலங்களுக்காக தமிழரது ரணங்களும் வலிகளும் கூட (காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னும்) புறந்தள்ளப் பட்டன. பேராண்மையின் முகவர்களாக மொட்டுக் கட்சியில் குழுமியிருக்கும் ராஜபக்ஷக்களின் நண்பர்கள் 'தமிழர்களுக்கு என்ன பிரச்சினை? தேசிய பிரச்சினை என்று எதைக் கூறுகிறார்கள்? தீர்வு என்று எதைக் கேட்கிறார்கள்?' என பொது வெளியிலேயே பிரச்சாரங்களுக்காக மக்களை உணர்வூட்டப் பேசுகிறார்கள்.

மஹிந்தவின் மகன் நாமல் 'நாங்கள் விழுந்து விட்டோம் என சிலர் கனவு காண்கிறார்கள். நாங்கள் தான் தொடர்ந்து ஆட்சி செய்கிறோம். மீண்டும் வருவோம். தேர்தலை கண்டு அஞ்சவில்லை.' – என்கிறார்.

அவர்களின் ஆதரவில் தற்சமயம் தங்கி இருக்கும் ரணிலோ புதிய அரசமைப்பை ஒரு வருடத்திற்குள் கொண்டு வருவேன் எனக் கூறி, அதனைத் தான் நல்லாட்சி காலத்தில் செய்த வரைவின் அடிப்படையில் இருந்து தொடராது, கோட்டாபய அமைத்த அரசியல் குழுவின் அறிவுரைகளில் இருந்து தொடங்குகிறார். அந்த அறிவுரைகள் 'ஒற்றையாட்சி' மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றே தெரிவிக்கின்றன.

அதேசமயம் இடது கையால் திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவுடன் சேர்ந்து அபிவிருத்தி செய்யப் போவதாகவும், அதனால் திருகோணமலை பிரதேசம் அமோக பயன்பெறும் என்றும் விளக்கங்கள் தரப்படுகின்றன. திட்டத்தின் அடிப்படையில் திருகோணமலையின் இன விகிதாசாரத்தை மாற்றி, அதனைச் சிங்களப் பெரும்பான்மையாக் குவதுதான் எண்ணம் என கலாநிதி தயான் ஜெயதிலக (ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆலோசகராக இருந்தவர்) எச்சரிக்கிறார் ஆக,

"ஏழரை தசாப்த காலமாக இந்த நாட்டில் புரையோடிப் போய் கிடக்கும் தேசிய இனப்பிரச்சினை குறித்து தெரியவே தெரியாது என்று அடம்பிடிக்கும் சிங்களத் தலைவர்களை ஆட்சி அதிகாரத்தில் வைத்துக் கொண்டு, இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலைதான்று.

"தலைவர் பிரபாகரனும் அவரது படையும் களத்தில் இருந்திருந்தால் நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பான தமிழர்களின் குரல், ஏனைய இலங்கைத் தலைவர்களுக்கு மத்தியில் மட்டுமல்லாமல், சர்வதேசத்தின் மத்தியிலும் ஓங்கிக் கேட்டிருக்கும்.

"ஆனால் அவரும் அவரது படையும் இல்லாமல் போனமையால், தமிழருக்கு என்ன பிரச்சினை என்று ஒன்றுமே புரியாத தரப்புகள் மாதிரி தென்னிலங்கை தலைவர்கள் கூற, அதைக் கேட்டு அடங்கியிருக்கின்ற நிலைமை தமிழருக்கு....!" – என இந்தப் பத்திரிகையே தலையங்கம் தீட்டி இருக்கிறது.

தரப்பட்ட சந்தர்ப்பங்கள் பலவற்றையும் தமிழ் மக்கள் தங்களது அடங்காத தன்மைகளாலும், நண்டுக் குணங்களாலும், யதார்த்தங்களையும் நிதர்சனமான வழிகளையும் தள்ளி எறிந்து, முள்ளிவாய்க்காலைச் சந்தித்தார்கள் என்பதையும் சொல்லி, அதே பண்புகள் தொடர்வதையும் சுட்டிக்காட்டி, யதார்த்த நிலைகளில் இருந்து இவற்றை கையாள வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

(வளரும்...)

# ஆக்கிரமிப்புக் காஷ்மீரில் பாகிஸ்தான் புரியும் அட்டூழியங்களுக்கு பதில் கூற வேண்டி வரும்

## 76 ஆவது காலாட்படை தினத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் எச்சரிக்கை

மனித உரிமைகள் என்ற பெயரில் முதலைக் கண்ணீர் வடிக்கும் பாகிஸ்தான், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள மக்களுக்கு எதிராக அட்டூழியங்களைச் செய்து வருவதாகவும், அதன் விளைவுகளை அந்நாடு அனுபவிக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வியாழக்கிழமை தெரிவித்தார்.


இங்கு – ஜம்மு கஷ்மீரின் புட்கமில் – 76 ஆவது காலாட்படை தின நிகழ்ச்சியில் உரையாற்றிய பாதுகாப்பு அமைச்சர் –

இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் காக்க தங்களால் இயன்ற அனைத்தையும் கொடுத்த இந்தியாவின் அனைத்து துணிச்சலான இதயங்களுக்கும் நான் தலை வணங்குகிறேன்.

"எதிர்காலத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலை வந்தாலும், எத்தனை பிளவுபடுத்தும் சக்திகள் நம் முன் வந்தாலும், அவர்களின் சொந்த மொழியில் பதில் சொல்லி, நம் நாட்டை புதிய உயரத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க, இந்த சௌரிய திவாஸ் நம்மைத் தூண்டுகிறது." – என்றார் பாதுகாப்பு அமைச்சர்.

மனித உரிமைகள் என்ற பெயரில் முதலைக் கண்ணீர் வடிக்கும் பாகிஸ்தான், தான் ஆக்கிரமித்த காஷ்மீரின் மக்கள் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரியும் என்றார்.

அங்கீகாரமில்லாமல் தான் கையகப்படுத்திய நமது பகுதி மக்களுக்கு எத்தனை உரிமைகளை பாகிஸ்தான் வழங்கியுள்ளது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். மனித உரிமைகள் என்ற பெயரில் முதலைக் கண்ணீர் வடிக்கும் பாகிஸ்தான் இந்த மக்களின் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். மனிதாபிமானமற்ற சம்பவங்களுக்கு பாகிஸ்தானே முழுப்பொறுப்பு.





இங்குள்ள மக்களின் பலம் மற்றும் நமது படைகளின் பலம் குறித்து நான் உறுதியாக நம்புகிறேன். இந்த ஆணைகள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றும் அவர் கூறினார்.

பிராந்தியத்தில் 'பயங்கரவாதிகளின் மனித உரிமைகளை' கொண்டு வந்ததற்காக புத்திஜீவிகள் என்று அழைக்கப்படுபவர்களை பாதுகாப்பு அமைச்சர் கடுமையாக சாடினார்.








இன்று பாகிஸ்தான் ஆக்கிரமித்த காஷ்மீரில் அட்டூழியங்களுக்கு வித்திடும் பாகிஸ்தான், வரும் காலத்தில் முட்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்று சிங் கூறினார்.

1947ஆம் ஆண்டு அகதிகளுக்கு அவர்களின் மூதாதையரின் நிலங்கள் மரியாதையுடன் திருப்பிக் கொடுக்கப்படும் போது பயணம் நிறைவுற்று நீதி கிடைக்கும் என்றார் அவர்.

இந்தப் பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பயங்கரவாதிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் மீது இராணுவம் அல்லது மாநில பாதுகாப்புப் படையினரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்ட போதெல்லாம், நாட்டின் சில அறிவுஜீவிகள் அந்த நடவடிக்கைகளில் பயங்கரவாதிகளின் மனித உரிமைகளை மீறுவதைக் கண்டறிந்துள்ளனர்." – என்று சாடினார் அவர்.

எங்கள் படைகள் தாக்கப்படும்போது, பாதுகாப்புப் படைகள் தாக்கப்படும்போது அல்லது பொது மக்கள் அதே பயங்கரவாதிகளால் தாக்கப்படும்போது, அவர்கள் இரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டால், அந்தச் சனயத்தில் மனித உரிமைகள் மீதான அக்கறை எங்கே போகிறது என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது? என்று ராஜ்நாத் கேட்கிறார்.




பயங்கரவாதத்திற்கு மதம் இல்லை என்பதை வலியுறுத்திய ராஜ்நாத், காஷ்மீர் என்ற பெயரில் எண்ணற்ற உயிர்கள் பலியாகின்றன என்றும் எண்ணற்ற வீடுகள் அழிக்கப்பட்டன எனவும் கூறினார்.

காஷ்மீரியத்தின் பெயரால் இந்த அரசு கண்ட பயங்கரவாதத்தின் தாண்டவத்தை விவரிக்க முடியாது. எண்ணற்ற உயிர்கள் பலியாயின, எண்ணற்ற வீடுகள்




அழிக்கப்பட்டன. மதத்தின் பெயரால் எவ்வளவு இரத்தம் சிந்தப்பட்டது என்பதற்குக் கணக்கு இல்லை. பலர் தீவிரவாதத்தை மதத்துடன் இணைக்க முயன்றார். ஆனால் பயங்கரவாதத்தால் பாதிக்கப்படுபவர்கள் ஏதேனும் ஒரு மதத்தில் மட்டும் இருக்கிறார்களா? எதிரில் இந்து, முஸ்லிம் இருக்கிறாரா என்று பார்த்தா பயங்கரவாதி செயல்படுகிறாரா? பயங்கரவாதிகளுக்கு இந்தியாவை குறிவைத்து தங்கள் திட்டங்களை செயல்படுத்த மட்டுமே தெரியும்." – என்று விசனித்தார் பாதுகாப்பு அமைச்சர்.

கில்ஜித், பால்திஸ்தான் உள்ளிட்ட பாகிஸ்தானின் சட்டவிரோத ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதியை மீட்பது குறித்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற இந்தியா உறுதி பூண்டுள்ளது என்றார் அவர்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

காலைக்கதிர் Kalaikkathir

## பதவிகளுக்காக ......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் உயிரிழந்த 6 குடும்பங்களுக்குத் தேவையான நிதியுதவியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் இதன் போது வழங்கிவைக்கப்பட்டது.

## மலையக மக்களை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நட்புறவு மற்றும் உறவுகளைப் பேணுவதற்கும் மலையக மக்கள் பங்களிப்பு வழங்குகின்றனர். இந்தியாவும் உங்களை மறக்காது. இந்தியா உங்களை எந்த நேரத்திலும் நினைவில் வைத்திருக்கும்.

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று நடைபெற்ற தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வீடுகளின் நிர்மாணம் ஊடாகவும் புலமைப் பரிசில்கள் மற்றும் கல்வி ஊடாகவும் இந்தியா தொடர்ந்தும் உங்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்படுகின்றது. நாங்கள் இங்கு வந்ததில் இருந்து இலங்கை மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றோம்.

இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் தொடர்பில் இந்திய மக்கள் அறிவார்கள். நான் இன்று ஒன்றைக் கூற விரும்புகின்றேன். இந்திய மக்கள் இலங்கையிலுள்ள சகோதர, சகோதரிகளுக்கு எப்போதும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். குறிப்பாக இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள்.

கடந்த அரசில் அமைச்சராக இருந்த போது வீடுகளை நிர்மாணிப்பதில் பழனி திகாம்பரம் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இன்று இந்தியாவின் உதவி மூலம் உணவு, எரிபொருள், மருந்து, உரம் ஆகியவற்றுடன் அரசி மாத்திரமல்லாமல் கோதுமை மாவும் இலங்கை மக்களுக்கும் இந்தப் பிராந்திய மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இளம் பிள்ளைகள், இளம் சிறுவர்கள் மற்றும் தாய்மாருக்கான பால்மாவை வழங்குவதற்கும் இந்தியா தயாராக உள்ளது. 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

அதேபோன்று நீங்கள் கேட்காமலேயே நண்பன் செய்வதைப் போன்று இந்தியாவும் உதவி வழங்கும். உங்களின் நண்பனான இந்தியா இருக்கும் என நான் உங்களுக்கு உறுதி அளிக்க விரும்புகின்றேன்.

இலங்கை மக்களுக்கும் இந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்களுக்கும் இடையில் மிகவும் பலமான உறவு காணப்படுகின்றது. நீங்கள் கட்டாயம் இந்தியாவுக்கு வருகைதர வேண்டும். அடிக்கடி இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டும். ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளும் பிரவாசி பாரதிய திவாஸ் கொண்டாடப்படுகின்றது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இந்திய வம்சாவளி தமிழ்த் தலைவர்கள் இந்தியாவுக்கு வருகை தர வேண்டும் எனக் கோருகின்றேன் - என்றார்.

## குளத்தில் மூழ்கி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சிப்பாய் பனாகொட இராணுவ முகாமிலிருந்து அநுராதபுரம் முகாமுக்கு மேலும் சில சிப்பாய்களுடன் சென்ற போது, அங்கிருந்த குளத்தில் நீராடிய போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக எஹெட்டுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் எகெட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

## நெருக்கடிகளின் போது அமெரிக்காவின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொண்ட போதெல்லாம் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவை ஒருபோதும் மறக்க முடியாது என்றும் கூறினார்.

கொழும்பில் அமெரிக்கத் தூதரகத்தின் புதிய கட்டடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தின் போது அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, 2001 ஆம் ஆண்டு தான் பிரதமராக இருந்த போது ஜோர்ஜ் புஷ்ஷின் தலைமையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் இருந்து இலங்கை மீள்வதற்கு பில் கிளிண்டன் தலைமையிலான அரசு வழங்கிய ஆதரவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இந்தக் கடினமான நேரத்தில் ஜோ பைடனின் தலையீட்டுடன் எமது நாட்டுக்கு உதவி கிடைத்திருக்காவிட்டால் இவ்வருடப் பெரும்போகம் வெற்றியளித்திருக்க முடியாது என்றும் கூறினார்.

74 ஆண்டுகால அமெரிக்க - இலங்கை நட்புறவு, கூட்டுச் செயற்பாடுகள் மற்றும் இருதரப்பு உறவுகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலாவது நாணயச் சட்டம் மற்றும் மத்திய வங்கியை நிறுவுதற்காக சிறந்த சட்டக் கட்டமைப்பொன்றை தயாரித்தல் என்பவற்றுக்காக அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்குத் தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

இவ்வாறான நீண்ட கால மற்றும் உளப்பூர்வமான நல்லுறவை பேணி வரும் இலங்கையும் அமெரிக்காவும் தொடர்ந்தும் எதிர்காலத்தில் நெருங்கிய நண்பர்களாகச் செயற்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

அமெரிக்காவும் இலங்கையும் பிரிக்க முடியாத பங்காளிகளாக, சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காக ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் முன்னோக்கிச் செல்வதாகவும் அவர் கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

அடுத்த ஆண்டு சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 75 ஆண்டுகள் நிறைவடையவுள்ளன. ஆனால், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளுக்கு நீண்ட வரலாறு உண்டு.

சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளைத் திறக்க மினரிகள் வந்தனர். மேலும் இலங்கையில் முதல் மருத்துவமனையை நிறுவியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

போர்க் காலத்தில் யாழ்ப்பாணம் மக்களுக்கு அந்த வைத்தியசாலை பெரும் சேவையை ஆற்றியது. இது ஒரு கிறிஸ்தவ மினரி இயக்கம் மட்டுமல்ல. கேணல் ஒல்காட் ஆற்றிய சேவையை நாம் அனைவரும் அறிவோம். அவர் ஆரம்பித்த ஆனந்தா கல்லூரியில் கற்ற பல மாணவர்கள் இங்கும் உலகம் முழுதும் சிதறிக் கிடக்கின்றனர்.

எங்களுக்கிடையிலான உறவு வர்த்தகம், கல்வி, மதம் சார்ந்ததாக மட்டுமல்ல, அது இராணுவ விவகாரங்களுடன் தொடர்புடையதாகவும் இருந்தது. குறிப்பிடத்தக்க நேரங்களில் நாங்கள் உங்களுக்காகப் பங்காற்றியிருக்கின்றோம்.

எனவே, தேவையான சமயங்களில் பங்களிக்கும் இந்த த் தொடர்பு நட்பு ரீதியான உண்மையான தொடர்பாகும். 1977 இல் நான் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசில் பிரதி வெளிவிவகார அமைச்சராக பதவி ஏற்றபோது, பிரதமர் லீ குவான் யூ மற்றும் பிரதமர் மல்கம் பிரேசர், ஜனாதிபதி றொனால்ட் ரீகன், பிரதமர் மார்கரெட் தட்சர் மற்றும் பிரதமர் நகாசோன் ஆகியோர் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் எங்களுக்கு ஆதரவளித்தனர்.

2001ஆம் ஆண்டு நான் பிரதமராக இருந்தபோது ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் வழங்கிய ஆதரவை கண்டிப்பாக இங்கு குறிப்பிட வேண்டும்.

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பைக் கட்டுப்படுத்தவும் சுனாமி அனர்த்தத்தினால் நாம் பாதிக்கப்பட்ட போதும் அவர் ஆற்றிய விசேட பங்களிப்புகளை இங்கு நினைவுகூருகின்றேன்.

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மற்றும் ஜனாதிபதி கிளின்டன் ஆகியோர் எமக்கு ஆதரவு வழங்க இலங்கை வந்தனர். இது நீண்ட கால நட்புறவு, ஜனநாயகக் கொள்கைகளை சீர்திருத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சி மற்றும் கருத்து சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கும் நான் பிரதமராக இருந்தபோது அமெரிக்காவின் ஆதரவு கிடைத்தது.

இந்த நெருக்கடியான நேரத்தில் எங்களுக்கு ஆதரவளித்த ஜனாதிபதி பைடனுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். உங்கள் ஆதரவு இல்லாமல் நாங்கள் பெரும்போகத்தை வெற்றிகரமாக முன்னெடுத்திருக்க முடியாது - என்றார்.

## யாழில் விஜயதாஸ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி வைத்தார்.

நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் இந்து பௌத்த கலாசார பேரவையில் இடம்பெற்ற நிகழ்விலேயே இந்தச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இரண்டாம் மொழி கற்கை நெறி நிலையத்தின் இயக்குனர் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஈ.எம்.யு.யு.குணரத்ன, யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உயித் லியனகே. யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழ். முஸ்லிம்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பெரிய மொஹைதீன் ஜும்மா பள்ளிவாசலில் மாலை 4மணியளவில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றதுடன் கறுப்பு கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் அவலநினைவலைகள் பகிரப்பட்டமையோடு, இதுவரை குறைந்தளவான முஸ்லிம் குடும்பங்களே மீள்குடியேறின எனவும், மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு இதுவரை பல அடிப்படை தேவைகள் இன்னமும் பூர்த்தி செய்யபடவில்லை எனவும் சுட்டிகாட்டப்பட்டது.

இதன்போது யாழ் பெரிய மொஹைதீன் ஜூம்மா பள்ளியின் தலைவர் சரவுல் அனாம், மௌலவி ஹக்கீம், மௌலவி அலியார் பைசர் காசிமி, யாழ் முஸ்லிம் ஒன்றிய தலைவர் ஆரிப் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## வவுனியாவில் நீதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

கொலையாளி ஜனாதிபதியாக உள்ள நாட்டில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும்?, குடும்பங்களாகச் சரணடையும் போது அவர்களுடன் சேர்ந்து சரணடைந்த 29 க்கும் மேற்பட்ட குழந்தைகள் எங்கே?, போர்க்காலத்தில் மரணித்த இராணுவ உடல்களைப் பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களைக் காணாமல் ஆக்கப்பட்டோர் என அவர்களின் குடும்பத்தையும் ஏமாற்றுகின்றது போன்ற பல வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## மலையகத் தமிழ் மக்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு தோல்வியடைந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகிறார் எனவும் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேண்டுகோளுக்கு இணங்க புதுச்சேரி யூனியன் பிரதேசம் மற்றும் இந்திய மக்களால் வழங்கப்பட்ட மருந்துப் பொருள்களை பொறுப்பேற்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இணைந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

23 வருடங்களுக்கு முன்னர் மறைந்த சௌமியமூர்த்தி தொண்டமானின் நினைவாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் இந்த மருந்துப் பொருள்களை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தமையுடன், ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் அந்த மருந்துப் பொருள்களைக் கையளித்தார்.

பெருந்தோட்ட வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சுக்குக் கீழ் கொண்டு வரும் அதேவேளை, தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு தாம் செயற்பட்டு வருகிறார் எனவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.

ஏனைய மக்களைப் போன்று மலையகத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களும் தமது சொந்த வீட்டில் வசிக்கும் வாய்ப்பைப் பெறுதல் வேண்டும் என்பதற்காகவே அவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கும் மற்றும் அவற்றில் வீடுகளை அமைக்கும் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கும் அரசின் ஆதரவு வழங்கப்படுகின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்வியை முடித்த பின்னர் இளைஞர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறும் போக்கு காணப்படுகின்றது என்றும், அதன் காரணமாக ஆபத்தில் உள்ள பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருந்தோட்ட இளைஞர்கள் மற்றும் நாட்டின் அனைத்து இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்க அரசு செயற்பட்டு வருகின்றது என்றும் கூறினார்.

மலையக மக்களை வறுமையில் இருந்து விடுவித்து, அவர்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்காக, அங்கு வாழும் மக்களின் எதிர்காலம் மற்றும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பில் அரசு மேலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜே.ஆர் ஜெயவர்தன ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், மலையகத்தில் வாழும் தமிழ் வம்சாவளி மக்களுக்கு, நாட்டின் ஏனைய பிரதேசங்களில் வாழும் மக்கள் பெறும் சலுகைகளை வழங்க அரசு மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த வேலைத்திட்டத்துடன் இணைந்து கொள்ளுமாறு மலையகத் தமிழ்த் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மறைந்த தொண்டமான், மலையக மக்களுக்காக ஆற்றிய சேவைகளைப் பாராட்டிய ஜனாதிபதி, ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர், தங்கியிருந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனைவருக்கும் அகிம்சை வழியில் குடியுரிமை வழங்கியதன் காரணமாக 20 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார் என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் நாட்டைவிட்டு வெளியேறியிருக்க வேண்டிய - ஆனாலும் இலங்கையில் தங்கியிருக்கத் தீர்மானித்த - பிரஜைகளும் குடியுரிமை பெற்றனர் என்றும் ஜனாதிபதி இங்கு நினைவு கூர்ந்தார்.


ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணசபைத் தேர்தலுக்கான புதிய திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்காவிட்டால் தேர்தல் இடம்பெறாது!

## தேர்தல் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா திட்டவட்டக் கருத்து



மாகாணசபைகளுக்கான புதிய சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து , அதனை நிறைவேற்ற வேண்டும். அவ்வாறில்லை எனில் மாகாணசபை தேர்தல் இடம்பெறாது.

தேர்தல் இடம்பெறாவிட்டால் மாகாணசபைகள் மக்கள் பிரதிநிதிகளால் அன்றி, அதிகாரிகளாலேயே தொடர்ந்தும் நிர்வகிக்கப்படும் நிலைமை ஏற்படும் என்று சுயாதீன தேர்தர்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்காக ஒதுக்கப்படும் நிதி, அவற்றின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகள், பாடசாலைகள் உள்ளிட்டவற்றின் புனர்நிர்மாணம் உட்பட பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

எனவே மாகாணசபைகளை வெள்ளை யானை என்று விமர்சிப்பது பொருத்தமற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாகாணசபை தேர்தல் தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் போதே ஆணையாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பொதுத் தேர்தலின் போது நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். எமது நாட்டில் நடைமுறையிலுள்ள அரசமைப்பிற்கமைய அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை ஜனாதிபதிக்கு கூட நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

ஜனாதிபதி விரும்பினாலும் அவரால் அதனை செய்ய முடியாது. மாறாக அதற்கு முன்னர் கலைக்க வேண்டுமெனில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் அதற்கான யோசனையை நிறைவேற்ற வேண்டும்.

அவ்வாறான யோசனை நிறைவேற்றப்பட்டாலும் அதனை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்பதை ஜனாதிபதி தீர்மானிக்க வேண்டும்.

2018 இல் 7 பேர் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர் குழாமினால் தெளிவாக இந்த விடயம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அதற்கமைய சட்ட ரீதியாக தற்போதைய காலத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்குக் கிடையாது.

தற்போது மாகாணசபைகள் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். மாகாணசபைகள் காணப்படுகின்றன. அதற்குரிய அமைச்சு காணப்படுகிறது.

அமைச்சின் கீழ் இதனுடன் தொடர்புடைய பல நிறுவனங்கள் இயங்குகின்றன. மாகாண சேவை ஆணைக்குழு உள்ளிட்டவை அவற்றில் உள்ளடங்குகின்றன.

அரசாங்கத்தால் இதற்கு நிதியும் ஒதுக்கப்படுகிறது. எனவே மாகாணசபைகளுக்கான பிரதிநிதிகள் மாத்திரமே தற்போது இல்லை.

மக்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு நிறுவனமும் மக்கள் பிரதிநிதிகள் இன்றி நிர்வகிக்கப்படக் கூடாது என்பதையே தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பம் முதல் வலியுறுத்தி வருகிறது.

எனவே இவற்றுக்கு நிச்சயம் மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்பட வேண்டும். மாகாணசபைகளை வெள்ளை யானைகள் என்றும் சிலர் விமர்ச்சிக்கின்றனர்.

மாகாணசபைகளுக்கான நிதி தொடர்பில் ஆராய்ந்த போது, அதில் சுமார் 90 சதவீத நிதி புனர்நிர்மாணப் பணிகளுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகள் , வைத்தியசாலைகளில் அதற்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் இது மாகாணசபைகளை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களுக்காகவே நிதி ஒதுக்கப்படுவதாக சிலர் குறிப்பிடுகின்றனர்.

மாகாணசபை வரவு – செலவு திட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளுக்காக 0.03 சதவீதமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையா வெள்ளை யானை என்கின்றனர்?

எது எவ்வாறிருப்பினும் மக்கள் பிரதிநிதிகள் இன்றி மாகாணசபைகளை நிர்வகித்துச் செல்கின்றமையை தேர்தல் ஆணைக்குழு கடுமையாக எதிர்க்கின்றது.

இதனை நாம் தெரிவுக்குழுவிலும் தெரிவித்திருக்கின்றோம். மாகாணசபை சட்டங்கள் இரண்டு காணப்படுகின்றன. 88 (2) மற்றும் 2017 (17) ஆகிய இரு சட்டங்கள் காணப்படுகின்றன.

2017 (17) சட்டத்திலுள்ள எல்லை நிர்ணய அறிக்கை தோல்வியடைந்துள்ளது. குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், அதிலுள்ள முக்கிய விடயமான எல்லை நிர்ணய அறிக்கை நிறைவேற்றப்படவில்லை. இதனை முன்வைத்த அமைச்சரும் கூட அதற்கு எதிராகவே வாக்களித்தார்.

குறித்த யோசனை தோல்வியடைந்ததால் , பிரதமர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் , அந்தக் குழு இரு மாதங்களுக்குள் அறிக்கையை சமர்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

அதற்கமைய நியமிக்கப்பட்ட குழு ஒரு தடவை மாத்திரமே கூடியது. அதன் பின்னர் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவேதான்புதியசட்டநடைமுறைப்படுத்தப்படாமையின் காரணமாக , பழைய சட்டத்தின் கீழ் தேர்தலை நடத்த முடியும் என்று நாம் குறிப்பிட்டோம்.

எவ்வாறிருப்பினும் புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டமையின் காரணமாக, பழைய சட்டத்தின் கீழ் நடத்த முடியாது என்றும், மாறாக புதிய சட்டத்தில் ஒரு சிறிய திருத்தத்தை மேற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே சட்டமா அதிபரின் நிலைப்பாடாகக் காணப்பட்டது. அதற்கமைய புதிய திருத்தத்தில் சிறிய திருத்தத்தை மேற்கொண்டு, மாகாணசபைகளை பழைய முறைமையின் கீழ் நடத்திச் செல்வதற்கும், அதன் பின்னர் எல்லை நிர்ணயத்துடன் அடுத்தடுத்த மாகாண சபைகளை நடத்திச் செல்வதற்கும் தெரிவு தீர்மானித்தது.

எனவே இதனை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாணசபைகளுக்கான புதிய சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்ற வேண்டும்.

அவ்வாறில்லை எனில், மாகாணசபை தேர்தல்கள் நடைபெறாது. மக்கள் பிரதிநிதிகள் இன்றி தொடர்ந்தும் அதிகாரிகளால் மாகாணசபைகள் நிர்வகிக்கப்படும். மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் இதுவே தேர்தல் ஆணைக்குழுவின் நிலைப்பாடாகும். – என்றார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுநீரக நோயாளர் அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், இதற்கான பிரதான காரணம் அங்குள்ள நிலத்தடி நீர் எனவும் சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் வருடந்தோறும் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குறிப்பாக மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெலி ஓயா, மாந்தை கிழக்கு. துனுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகரித்த சிறுநீரக நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். இதற்கான காரணம் இங்குள்ள நிலத்தடி நீரில் காணப்படுகின்ற பார உலோகங்கள் என்றும் சுகாதார தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான மாவட்ட செயலக புள்ளிவிபர தகவல்களின படி முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்த சிறுநீரக நோயாளிகளில் வெலிஓயாவில் 1.83 வீத மக்களும், மாந்தை கிழக்கில் 1.60 வீத மக்களுக்கும், துனுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 1.00 வீதமான மக்களுக்கும் சிறுநீரக நோய் காணப்படுகிறது. மாவட்டத்தில் முதல் இடங்களில் மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகள் காணப்படுகின்றன.

இதனைத் தவிர புதுகுடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 0.51 வீத மக்களுக்கும்,கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 0.14 வீத மக்களுக்கும்,ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 0.07 வீதமான மக்களும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். என மாவட்ட புள்ளி விவரத் தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதில் வெலிஓயா, மாந்தை கிழக்கு, துனுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள நிலத்தடி நீரில் காணப்படுகின்ற அதிகரித்த பார உலோகங்கள் காரணமாகவே மக்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வாராந்தம், மாதாந்தம் யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு கடும் சிரமங்களுக்கு மத்தியில் குருதி சுத்திகரிப்பு சிகிச்சைக்கு சென்று வருகின்றனர் என்றும் சுஜுதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்தப் பிரதேசங்களில் உள்ள மக்களை சிறுநீரக நோயிலிருந்து பாதுகாக்க வேண்டும் எனில் குடிப்பதற்கு உகந்த நீரை வழங்க வேண்டும் என்றும் சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது.

## சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் பணி அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படுமாம்!

சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சடிக்கும் பணி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாகப் பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக, சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடும் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டு குறைந்த எண்ணிக்கையில் விநியோகிக்கப்பட்டன.

அடுத்த வாரம் ஜேர்மனியில் இருந்து 5 லட்சம் அட்டைகளை பெற்றுக்கொள்ளவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது 6 லட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட உள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிரந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## புத்தர் சிலையை விற்பனை செய்யமுயன்ற இருவர் கைது!

தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் தங்க முலாம் பூசப்பட்ட புத்தர் சிலையை விற்பனை செய்வதற்கு முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சல்பிட்டிகம பிரதேசத்தில் தெஹியத்தகண்டிய பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் தங்க முலாம் பூசப்பட்ட புத்தர் சிலையை விற்பனை செய்வதற்கு முயன்ற இருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்டவர்கள் 27 மற்றும் 35 வயதுடைய தெஹியத்தகண்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் புராதன மதிப்புடைய 1 அடி உயரம், மற்றும் 14 கிலோ 60 கிராம் நிறையுடைய முலாம் பூசப்பட்ட புத்தர் சிலையை விற்பனை செய்வதற்கு முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

சந்தேகநபர்கள் தெஹியத்தகண்டிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

## கொழும்பு மாநகர சபை மேயர் பதவிக்கு முஜிபுர்?

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் அந்தக் கட்சியில் இருந்து கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு போட்டியிடவுள்ளார்.

அவர் அந்தப் பதவிக்கு போட்டியிட கட்சித் தலைமையின் ஒப்புதல் ஏற்கனவே கிடைத்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் சிறுபான்மை வாக்கு அதிகம் உள்ளதால் அந்தப் பதவிக்கு போட்டியிட்டால், கட்சிக்கு அதிக பலம் கிடைக்கும் என அந்தக் கட்சியில் பலர் தெரிவித்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைக்காக முஜிபுர் ரஹ்மான் தாக்கல் செய்த வேட்பு மனு வேட்பாளருடன் ஏற்பட்ட பிரச்சினையால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எம்.பிகளின் மருத்துவக் காப்பீடு 10 லட்சம் ரூபாவாக அதிகரிப்பு?

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மருத்துவக் காப்புறுதித் தொகையை 10 லட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனையை முன்வைக்க சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

இந்த விவகாரம் நாடாளுமன்றத்தின் அவைக் குழுவில் விவாதிக்கப்பட்ட போதே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரி வித்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெற்றுக்கொண்ட மருத்துவக் காப்புறுதி இரண்டு லட்சம் ரூபாவாகும்.

பொருளாதார சூழ்நிலை காரணமாக அனைத்து மருத்துவ சேவைகளும் அதிகரித்துள்ள நிலை யில் காப்புறுதித் தொகை போதுமானதாக இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.10.2022இல் வெளியிடப்பெற்றது.